**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : STC.586/2021**

**Prosecution witness : அ.சா. 2 Date : 10.08.2023**

| Name : ராஜா | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை செய்கிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது பெரியப்பா மகள் ஆவார். கடந்த 17.12.2019 – ம் தேதி மாலை 4 மணிக்கு பிரச்சனை உள்ள பூமியில் கீத்துக்கொட்டாய் உள்ள இடத்தில் சின்னபையன் என்பவர் டிராக்டரில் மண் கொண்டுவந்து கொட்டிக்கொண்டிருந்தபோது எனது பெரியப்பா சின்னபையன் பார்த்து எதிரி ஏன் மண் கொட்டுகிறீர்கள் என்று கேட்டார். ஏற்கனவே நிலம் சம்மந்தமாக மேட்டூர் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. அப்போது அ.சா1 எதிரியை பார்த்து ஏன் தகராறு செய்கிறீர்கள் என கேட்டபோது தேவடியா பையா என்று சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி எதிரி பேசினார்.

2. பின்னர் அ.சா1 ஐ எதிரி வலது கன்னத்தில் கையால் அடித்து மற்றும் வயிற்று பகுதியில் கையால் குத்தினார். காயம் பட்ட அ.சா.1 ஐ ஜலகண்டாபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் கொண்டுசென்று சேர்த்தோம். சம்பவத்தை நான் ஆப்பிள் கடையிலிருந்து பார்த்தேன். சுமார் 100 அடி தூரத்தில் ஆப்பிள் கடை உள்ளது. ஆஜர் எதிரிதான் சம்பவத்தன்று அ.சா.1 ஐ அடித்தார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– வழக்கறிஞர் ஆஜர் சிவில்**

**பிரச்சனை உள்ளதாகவும் மீண்டும் நகல் தேவைப்படுவதாலும் அ.ச.1 ஐ விசாரித்தபிறகு தான் குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டும் என குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : STC.586/2021**
**Prosecution witness : அ.சா. 3 Date : 10.08.2023**

| | |
|---|---|
| **Name : வெற்றிவேல்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)
**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுகாரன் வலவு ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து மெக்கானிக்காக வேலை செய்கிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 17.12.2019 – ம் தேதி மாலை 4 மணிக்கு எனது மாமனார் என்பவர் டிராக்டரில் மண் கொண்டுவந்து கொட்டிக்கொண்டிருந்தபோது எதிரி இதை பற்றி கேட்டார். அப்போது அ.சா1 எதிரியை பார்த்து ஏன் தகராறு செய்கிறீர்கள் என கேட்டபோது தேவடியா பையா என்று சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி எதிரி பேசினார்.

2. பின்னர் அ.சா1 ஐ எதிரி வலது கன்னத்தில் கையால் அடித்து மற்றும் வயிற்று பகுதியில் கையால் குத்தினார். காயம் பட்ட அ.சா.1 ஐ நான் இருசக்கரவாகனத்தில் ஜலகண்டாபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் கொண்டுசென்று சேர்த்தேன். சம்பவ சமயத்தில் நான் எனது கடையிலிருந்தேன். தகவல் கேட்டு சம்பவ இடம் வந்தேன். ஆஜர் எதிரிதான் சம்பவத்தன்று அ.சா.1 ஐ அடித்தார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– வழக்கறிஞர் ஆஜர் சிவில்**

**பிரச்சனை உள்ளதாகவும் மீண்டும் நகல் தேவைப்படுவதாலும் அ.ச.1 ஐ விசாரித்தபிறகு தான் குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டும் என குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : STC.586/2021**

**Prosecution witness : அ.சா. 4 Date : 10.08.2023**

| | |
|---|---|
| **Name : கவிதா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுகாரன் வலவு ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது கணவரின் தங்கை ஆவார். கடந்த 17.12.2019 – ம் தேதி மாலை 4 மணிக்கு எனது தாத்தா சின்னபையன் என்பவர் டிராக்டரில் மண் கொண்டுவந்து கொட்டிக்கொண்டிருந்தபோது எதிரி இதை பற்றி கேட்டார். அப்போது எனது தாத்தாவை எதிரியை பார்த்து தேவடியா பையா என்று சொல்லி கெட்டவார்த்தையால் திட்டி பேசினார். அப்போது நாகலட்சுமி என்பவர் ஏன் தகராறு செய்கிறீர்கள் என்று கேட்டார். எதிரி ராஜீ என்பவர் கண்டாரோலி தேவடியா என்று கெட்டவார்த்தையால் பேசினார்.

2. பின்னர் அ.சா1 ஐ எதிரி வலது கன்னத்தில் கையால் அடித்து மற்றும் வயிற்று பகுதியில் கையால் குத்தினார். காயம் பட்ட அ.சா.1 ஐ ஜலகண்டாபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் கொண்டுசென்று சேர்த்தார்கள். சம்பவ சமயத்தில் நான் இடத்தில் இருந்தேன். ஆஜர் எதிரிதான் சம்பவத்தன்று அ.சா.1 ஐ அடித்தார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். என் முன்னால் வரைபடம் வரைந்து சம்பவம் நடந்த மறுநாள் கடந்த 18.12.2019 ம் தேதி மாலை 3 மணி சுமாருக்கு நானும் கலைச்செல்வி என்பவர் சாட்சியாக இருக்க வரைபடம்

வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான், அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பார்வை மகசர் **அ.த.சா.2** ஆகும் போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– வழக்கறிஞர் ஆஜர் சிவில் பிரச்சனை உள்ளதாகவும் மீண்டும் நகல் தேவைப்படுவதாலும் அ.ச.1 ஐ விசாரித்தபிறகு தான் குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டும் என குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : STC.586/2021**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 10.08.2023**

| | |
|---|---|
| **Name : செல்வி எ கலைச்செல்வி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டுகாரன் வலவு ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 எனது நெருங்கிய உறவினர் ஆவார். கடந்த 17.12.2019 – ம் தேதி மாலை 4 மணிக்கு எதிரி அ.சா.1 ஐ கையால் வலது கன்னத்தில் அடித்தார். அ.சா.1 ஐ எதிரி கெட்டவார்த்தையால் திட்டி பேசினார். என்பவர் கண்டாரோலி தேவடியா என்று கெட்டவார்த்தையால் பேசினார்.

2. காயம் பட்ட அ.சா.1 ஐ ஜலகண்டாபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் கொண்டுசென்று சேர்த்தார்கள். ஆஜர் எதிரிதான் சம்பவத்தன்று அ.சா.1 ஐ அடித்தார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். என் முன்னால் வரைபடம் வரைந்து சம்பவம் நடந்த மறுநாள் கடந்த 18.12.2019 ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு நானும் அ.சா4 ம் என்பவர் சாட்சியாக இருக்க வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான், அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பார்வை மகசர்உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். 2 வது கையொப்பம் மட்டும் **அ.த.சா.3** ஆகும் போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– வழக்கறிஞர் ஆஜர் சிவில் பிரச்சனை உள்ளதாகவும் மீண்டும் நகல் தேவைப்படுவதாலும் அ.ச.1 ஐ விசாரித்தபிறகு தான் குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டும் என குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.**

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**